# Hartleyite - Canada/USA

Newsletter of the Hartley College Past Pupils' Association of Canada and USA
Volume 10 No.1 April 28, 2006

## ஹாட்லிக் கல்லூரியிலிருந்து பாதுகாப்பு வலயத்தை நீக்கக் கோரி email பிரச்சாரம் ஆரம்பம்

1995 ம் ஆண்டு முதல் இன்றுவரை ஹாட்லிக் கல்லூரியின் வளவும் மைதானமும் இலங்கை அரச படையினரால் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது. இதனை நீக்குவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கக் கோரி email மூலம் கனடிய வெளிவிவகார அமைச்சர், ஒன்ராரியோ மாகாண முதல்வர், ஐக்கிய நாடுகள் சங்கத்தின் செயலாளர் நாயகம், நோர்வே நாட்டு வெளிவிவகார அமைச்சர், அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர், ஆகியோருக்கு வேண்டுகோள் விடுக்கும் பிரச்சாரத்தை கனடிய அமெரிக்க ஹாட்லிக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் ஆரம்பித்துள்ளது. அந்த emailஐ 5ம் பக்கத்திற் காணலாம்.

இந்தப் பிரச்சாரத்தின் வெற்றி அதிற் கலந்து கொள்ளும் ஹாட்லிப் பழைய மாணவர்களின் எண்ணிக்கையிலேயே தங்கியுள்ளது. எமது web site ஆன http://www.hartleycollege.org இல் இருக்கும் link ஐ அழுத்தி உங்கள் email ஐ அனுப்புவதன் மூலம் எதேச்சாதிகார ஶ்ரீலங்கா இராணுவத்தின் பிடியில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் எமது பாரம்பரியக் கல்லூரி வளவையும் அங்கு அச்சத்துடன் கல்வி கற்கும் எமது மாணவமணிகளின் சுதந்திரத்தையும் நிம்மதியையும் மீட்டெடுக்கும் முயற்சிக்குக் கை கொடுக்குமாறு சங்கம் வேண்டிக்கொள்கிறது.

இந்த இதழில்..

நிதியுதவிப் படக்காட்சி ........................................... 1
ஹாட்லிக் கலை விழா ............................................... 1
ஏனைய இவ்வாண்டு நிகழ்ச்சிகள் ............................. 2
**Editorial Board** …………………………………... 2
புதிய ஆயுட் கால அங்கத்தவர்கள் ........................... 2
புதிய அங்கத்தவர் சேர்க்கும் பணி ........................... 2
புதிய நிர்வாக சபை உறுப்பினர் ............................... 3
கருணாநிதியின் மறைவு-............................................ 3
கருணாநிதியின் கவிதைகள் சில .............................. 3
இரு ஹாட்லி மாணவர்கள் கைது. .......................... 3
Association thanks past committee members 3
திருத்தங்கள் ............................................................. 4
**Reflection from members** ………………………... 4
ஆசிரியர் தலையங்கம் ............................................... 4
**Email campaign** ………………………………….. 5
**Executive Committee photo** ……………………... 6
**Application form** …………………………………. 7

### படக்காட்சியில் $2500 க்கு மேல் வருமானம்

மார்ச் மாதமென்றாலேயே கனடாவில் வாழும் ஹாட்லி மாணவர்களுக்கு நினைவுக்கு வருவது படக் காட்சி தான். அவர்களுக்கு இம்முறை ஆச்சரியம் காத்திருந்தது. சு.உருத்திரனின் ஏற்பாட்டில் ABCD, தம்பி ஆகிய இரு படங்களை ஓடிச் சாதனை செய்துவிட்டார்கள் எங்கள் புதிய நிர்வாகிகள். அது மாத்திரமா? 700க் கும் மேற்பட்ட நுழைவுச் சீட்டுக்களை விற்று $2500 க்கும் அதிகமான வருவாயை முதல் நிகழ்ச்சியிலேயே எமது சங்கத்துக்குப் பெற்றுத்தந்த உற்சாகம் மிக்க அங்கத்தவர்கள் அனைவரும் பாராட்டுதலுக்குரியவர்கள். குறிப்பாக, 160 சீட்டுகளை விற்றுத் தந்த சு.உருத்திரனைச் சங்கம் பிரத்தியேகமாகப் பாராட்டுகிறது.

அதிகளவில் சீட்டு விற்றுத்தந்த சாதனையாளர்கள்:

| | | | |
|---|---|---|---|
| சி.உருத்திரன் | 160 | கு.மனோகரன் | 10 |
| க.மகேஸ்வரன் | 70 | ச.சத்தியசீலன் | 10 |
| வ.ஜெயராமன் | 50 | பொ.ரமேஷ்வரன் | 10 |
| கி.ஆனந்தக்கிருஷ்ணன் | 30 | இ.தனராஜ் | 10 |
| மு.விஜேந்திரா | 30 | மு.தியாகேந்திரன் | 10 |
| வீ.விஜேந்திரா | 30 | மு.தயாபரன் | 10 |
| சு.ரமேஷ் | 30 | வி.மோகன் | 10 |
| சீ.சிவபாலரட்ணம் | 30 | தி.திருச்செல்வம் | 10 |
| சு.சிவராஜா | 15 | ஜோ.செபஸ் | 10 |
| ந.சிவபாலன் | 15 | அ.சண்முகவடிவேல் | 10 |
| சி.சிவகுமார்(காந்தி) | 15 | மு.அற்புதநாதன் | 10 |
| கோ.இராஜரட்ணம் | 10 | மு.தயாபரன் | 10 |
| வி.மனோகரன் | 10 | ந.சிவசுப்பிரமணியம் | 10 |

### கலை விழா ஜூன் 10 – மாலை 5:30

எமது கலை விழா இம்முறை உப தலைவர் சிவராஜாவின் ஏற்பாட்டில் கோலாகலமாக நடாத்தப்பட இருக்கிறது. நடனங்கள், நாடகம், பட்டி மன்றம், விகடம் நிறைந்த வில்லுப் பாட்டு, வீரம் நிறைந்த பேச்சு, வண்ணமிகு நளின நங்கையர் நம்பியர் நடனமாடும் திரையிசை, பிலிப்பீன்ஸ் மற்றும் கரீபியன் பல்கலாச்சார நடனங்கள் என்றவாறு மிகவும் தரமான முறையில் கட்டுக்கோப்புடன் ஒழுங்கு படுத்தப்படும் இவ்வரிய கலை விழாவைக் காணத்தவறாதீர்கள்.

Venue: Glen Forest Middle School Auditorium,
3575 Fieldgate Drive, Mississauga,.
Time: June 10 2006 5:30 p.m..
Tickets: Front seats (2-Adults) -$50
Adults: $10, Teens: $5 Children: Free.

இவ்வாண்டு எல்லா நுழைவுச் சீட்டுக்களும் விழா நாளுக்கு முன்பேயே விற்பனையாகி முடிந்து விடுமென்பது நிச்சயம் என்பதால், உங்கள் ஆசனங்களை வசதி போலப் பிடித்துக் கொள்ளவேண்டுமாயின் **வேளைக்கே வாருங்கள்.** விழா சரியாக மாலை 5:30 க்கு ஆரம்பித்து இரவு 10:30 க்குச் சரியாக நிறைவு பெறும். உணவுச் சாலை விழா ஆரம்பமாகும் நேரத்திலிருந்து நிறைவுபெறும் வரை திறந்திருக்கும்.

Driving Direction:

- 401 to Dixie Rd South wards, turn left on to Burnhamthorpe Rd East wards, turn right on to Fieldgate Drive
- 427 to Burnhamthorpe West wards, turn left on to Fieldgate drive
- QEW to Dixie North, turn right on to Bloor Rd East wards, turn left on to Fieldgate Drive

## எமது ஏனைய இவ்வாண்டு நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| கிரிக்கட் | ஜுலை 3 | அமைப்பு வி.மனோகரன் |
| ஒன்றுகூடல் | ஜுலை 8 | அமைப்பு: தி.திருச்செல்வம் |
| பொதுக்கூட்டம் | நவம்பர் 18 | அமைப்பு: வீ.விஜேந்திரா |
| இராப்போசனம் | நவம்பர் 18 | அமைப்பு: கு.மனோகரன் |

**Editorial Board -**Reported by President K.Rajaratnam

This newsletter is our major publication. It brings out our Association's activities, news about Hartley College, her students, past pupils,«ñð teachers and other branch activities. It is more than a newsletter; it is an archive of events and thus matters published here have to be reported correctly and properly. Our committee realized its importance, and appointed an editorial board headed by the Editor Sathiyaseelan, and comprising of K.Rajaratnam, V. Vijenthira and Raje Thanaraj. Hereafter we will distribute not only to the life members, but also to all the Hartelyites in Canada and USA who are known to us. The purpose is grand. When more news about Hartleyites reach Hartleyites more members will join us.

பொதுவாக ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் நன்கு பரிச்சயமானவர்களென்று பேர் போனவர்கள். ஆனால் எல்லா ஹாட்லியினரும் ஆங்கிலத்தில் தங்கள் மேற்படிப்புக்களை ஆங்கிலத்தில் மேற்கொள்வது மில்லை; ஆங்கிலத்திற் தொழில் பார்ப்பதுமில்லை. அரச கரும மொழியாக ஆங்கிலத்தைக் கொண்டிருக்கும் நாட்டில் வாழ்வதால் நாம் எல்லோரும் திடீரென ஆங்கிலத்தில் முழுமையான பரிச்சயம் பெற்று விடமுடியாது. சொந்தத் தாய் மொழி இருக்கும் போது பலருக்கு அரைகுறையான இன்னொரு மொழியில் எமது கருத்துப் பரிமாற்றத்தை வைத்துக்கொள்வது விந்தையானது மாத்திரமல்ல, அடிப்படை நோக்கத்துக்கே எதிரானது. கடந்த காலங்களில் எமது சங்கத்தின் நடவடிக்கைகளில் சேர்ந்து தொண்டாற்றுவதற்கு ஹாட்லிப் பழைய மாணவர்கள் கலந்து கொள்ளத் தயங்கியதற்கு நிர்வாகசபைக் கூட்டங்களிலும் சங்க நிகழ்வுகளிலும் ஆங்கிலத்தை ஊடகமாகப் பயன்படுத்தியதும் ஒரு முக்கிய காரணமென்பது பலரின் அபிப்பிராயமாகும்.

தாய் நாட்டுக்காகவும் அங்கு வாழும் எம்மவரின் அடிப்படை உரிமைகளுக்காகவும் எமது மொழி நிலைத்து நிற்பதற்காகவும் பெரிய போராட்டமே நடந்து கொண்டிருக்கும் போது நாமும் எமது மொழியைப் பேண முயல்வோம். ஆகவே எமது செய்தித்தாளை இனிமேல் இயன் றளவு தமிழிலேயே பிரசுரிப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## புதிய ஆயுட் கால அங்கத்தவர்கள்

| | |
|---|---|
| 158 Nehru Gunaratnam | 416-219-1262 |
| 159 V. Gnanachandran | 905-672-1792 |
| 160 S. Sureshan | 416-305-9541 |
| 161 G. Maheswaran | 416-817-0654 |

## புதிய அங்கத்தவர் சேர்க்கும் பணி

எமது புதிய நிர்வாக சபை ஏற்கனவே புதிய அங்கத்தவர்களைச் சேர்க்கும் பணியில் இறங்கி விட்டார்கள். சென்ற ஆண்டு சேர்த்த 30 சாதாரண அங்கத்தவர்களுடன் ஐந்து ஆயுட் கால அங்கத்தவர்களும் இந்த ஆண்டு இன்னும் நான்கு ஆயுட் கால அங்கத்தவர்களும் சேர்ந்துள்ளார்கள். தற்போது வெளிநாடுகளில் அதிகமான எண்ணிக்கையில் கனடாவிலும் அமெரிக்காவிலுமே ஹாட்லியினர் நிரந்தரமாக வசிப்பதாகக் கணக்கெடுக்கப் பட்டுள்ளது. ஆனால் எமது சங்கத்தில் தற்போது 161 ஆயுட் கால அங்கத்தவர்களும் 30 சாதாரண அங்கத்தவர்களுமே இருக்கிறார்கள்.

தற்போதைய நிர்வாக சபை இதனை ஆழமாக ஆராய்ந்து புது அங்கத்தவரை எமது சங்கத்தில் சேர்க்கும் பணிக்கு முன்னுரிமை கொடுத்துள்ளது. அதன் முதற் கட்டமாக சாதாரண அங்கத்தவர்கள் மேலதிகமாக $90 மாத்திரம் வருகின்ற செப்ரம்பர் மாத இறுதிக்குள் செலுத்தி ஆயுட்கால அங்கத்தவர்களாகும்படி எமது தலைவர் அவர்களைத் தனிப்பட்ட முறையிற் கேட்டுக் கொண்டுள்ளார்.

நிறைந்த அங்கத்தவர் எண்ணிக்கை தான் எமது சங்கத்தின் வெற்றிக்குரிய இரகசியம் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. சங்கத்தின் வெற்றி ஹாட்லிக்கல்லூரியின் மறு கட்டுமானங்களுக்குக் கிடைக்கும் ஒரு நல்ல உந்துகோல். இந்தச் செய்தித்தாள் கிடைக்கும் ஒவ்வொருவரும் உங்களுக்குத் தெரிந்த ஹாட்லிப் பழைய மாணவனை அங்கத்தவராகச் சேர்க்க முயலவேண்டும். இதனுடன் ஒரு புதிதாக வடிவமைக்கப்பட்ட அங்கத்தவ விண்ணப்பப் படிவத்தையும் உங்கள் பாவனைக்கு அனுப்பி யுள்ளோம். இதனைத் தேவையானளவு பிரதி செய்யலாம் அல்லது www.hartleycollege.org க்குப் போய்ப் பெற்றுக் கொள்ளலாம். புதிய அங்கத்தவர்களைச் சேர்த்து எமது சங்கத்தின் மேம்பாட்டுக்கு உதவுமாறு தலைவர் கேட்டுக் கொள்கின்றார்.

## புதிய நிர்வாக சபை உறுப்பினர்

தனிப்பட்ட காரணங்களுக்காகத் தனது உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த மணிவண்ணனின் இடத்துக்கு பழைய நிர்வாக சபையில் அங்கத்தவராக இருந்த மு. தயாபரனின் விண்ணப்பத்தை எற்றுக்கொண்டு பெப்ரவரி 18ம் திகதி சனிக்கிழமை நடந்த கூட்டத்தில் ஏகமனதாக சபை அவரை நியமனம் செய்தது.

M.Thayaparan (416)454-8568 thayanirma@yahoo.ca

## கருணாநிதியின் மறைவு-எமக்கு ஒரு பெரிய இழப்பு

எமது நிர்வாகசபை உறுப்பினர் திரு. கனகராசா கருணாநிதியின் அகால மரணம் எம் எல்லோரையும் அதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டது.

கருணாநிதி கனடா ஹாட்லிக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் ஆரம்ப கர்த்தாக்கள் மூவரில் ஒருவர். எமது சங்கத்தின் பல நிர்வாகக் குழுக்களின் உறுப்பினராக இருந்து தொண்டாற்றியவர். கலையார்வம் மிக்க கருணாநிதி கவிதை எழுத வல்லவர். இவரது கவிதைகள் எமது சங்கத்தின் கலைவிழா வெளியீடுகளிற் பிரசுரிக்கப்பட்டது. நாட்டுப் பற்று இவரின் கவிதைகளில் நன்கே வெளிப்படும். கீழே அவற்றில் சிலவற்றை மறுபிரசுரம் செய்கிறோம். அவர் நாடகங்களிற் கதாநாயகனாகவும் ஒரு நாடகத்திற் கதாநாயகியாகவும் பாத்திரமேற்று நடித்துப் புகழ் படைத்தவர். தான் நடித்தது மாத்திரமல்லாது தனது மகளையும் பங்கேற்க வைத்தவர். கருணாநிதி கிரிக்கட் போட்டியில் மிகவும் ஆர்வலர். யாழ் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர்களுக்கும் எமக்கும் நடக்கும் வருடாந்தக் கிரிக்கட் போட்டியைப் பார்வையிடத் தமது குடும்பத்தினர் சகிதம் வந்து எமது வீரர்களுக்கு உற்சாகமளிப்பதில் முன்னிற்பார் கருணாநிதி.

அவரது மரணச் சடங்கில் எமது பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் பழைய மற்றும் தற்போதைய நிர்வாக சபை அங்கத்தவர்கள் கலந்துகொண்டு மலர் வளையம் வைத்துத் தமது இறுதி வணக்கத்தைத் தெரிவித்தனர். எமது தலைவர் கோ. இராஜரட்ணத்தின் சார்பில் தி. திருச்செல்வமும், செயலாளர் வீ. விஜேந்திராவும், ந. சிவபாலனும், மு. அற்புதநாதனும் இரங்கலுரை வழங்கினர்.

அன்பன் கருணாநிதியை இழந்து தவிக்கும் அவரது மனைவியார் அகிலா, பிள்ளைகள் காமேஷ், ரமேஷ், மிதிலா, மைத்துனர்கள் சி. சத்தியமூர்த்தி குடும்பத்தினருக்கும் சி. சிவகுமார் (காந்தி) குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

## கருணாநிதியின் கவிதைகள் சில



ஹாட்லி

வங்கக் கடல் இதன்
வாசலில் மோதும்
வாடைக் காற்று வகுப்பறையில்
பாடம் கேட்கும்
கட்டிடச் சுவர்கள் எல்லாம்
கணிதம் செய்யும்
வளர்ந்து நிற்கும் மரங்கள் எல்லாம்
விஞ்ஞானம் போதிக்கும்
துரும்புகள் கூடத் துடுப்படிக்கும்
புல்லுகள் கூட 'புட்போல்' அடிக்கும்
சித்திரம் என்ன சிறுகதை என்ன
அத்தனையும் இங்கு அத்துப்படி
ஹாட்லியே உன் புகழை
வானமே அண்ணாந்து பார்க்கிறது.

1999 - கலை விழா மலர்

2\. மாவீரர்களே
தூங்குங்கள்
உங்கள் கனவுகளை
சுமந்துகொண்டு
நாம் தொடர்ந்து
செல்கின்றோம்
விடியலை
நோக்கி.

1998 - கலை விழா மலர்

## G.C.E.O/L students score well

Reported by Shan Shanmuganathan of Global trust

In last year O/L exams, 132 out of 138 who sat for the exam have passed. One student obtained 10A, 6 students obtained 9A, and another 6 students obtained 8A. Overall 26 students obtained 6 or more A's.

Compared to last year, the performance is almost similar, however the Principal is pleased with the fact that 5 students (out of the 6 who obtained 9A's) got an A in English Literature.

## இரு ஹாட்லி மாணவர்கள் கைது. -

ஏப்ரல் 2, 2006 அன்று பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினரின் திடீர் சுற்றிவளைப்பின் போது ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் கிருஷ்ணராஜா திவாகர் (21), கிருஷ்ணராஜா விஜேகாந்த் (20) கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களை விடுதலை செய்யுமாறு கோரித் தாக்கல் செய்த மீளாய்வு மனு மீது ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்க அரச தரப்பு சட்டத்தரணி கேட்ட நீண்ட கால அவகாசத்தை மறுத்த நீதிபதி, மே 8ம் திகதி ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்குமாறு பணித்துள்ளார்.

இராணுவமும் அரசும் இவர்கள் ஆயுதங்களைப் பதுக்கி வைத்திருந்ததாகக் குற்றம் சுமத்தினாலும் அயலவர்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு முறையிடும் போது இந்தக் குடும்பத்தவர்கள் அப்பாவிகள் என்றும் இவர்களுக்கும் ஆயுதங்களுக்கும் தொடர்பிருக்க முடியாதென்றும் தெரிவித் திருக்கிறார்கள். மேலும் இது போன்ற இராணுவத்தின் நடவடிக்கைகள் தமிழ்த்தேசீயப் போராட்டத்துக்கு ஆதரவான மக்களை அந்த இடத்தை விட்டு வெளியேற்றுவதற்குக் தொல்லை கொடுக்கும் ஒரு திட்டமாகவே அந்தப் பகுதி மக்கள் கருதுகிறார்கள்.

## Association thanks past committee members

Our Association has been functional for the last 17 years. The past executive committees have made tremendous efforts to solidify the association and helped build our Alma Mater. It is incumbent upon us to keep up the spirit of the past. Also, it is our duty to express our appreciation to the members of the past committees for the countless hours they devoted in organizing events for fund raising, and for fellowship among members.

Greatest gifts are the blessings of the past; let us thank those who came before us.

## திருத்தங்கள்

எமது முந்தைய இதழில் வெளிவந்த விஷயங்கள் சிலவற்றில் இருந்த சில தவறுகளைச் சுட்டிக்காட்டிய அங்கத்தவர்கள் தந்த திருத்தங்களைச் சரியாக ஆராய்ந்தபின் கீழே தருகிறோம்.

1. Page 1. Annual Nite, which was attended by **unusually large** number …
2. Committee members:
   a. K.Rajaratnam **raja@ssds.ca**
   b. V.Vijenthira **vij@rogers.com**
   c. S. Šivarajah **surensiva42@hotmail.com**
   d. C.Manoharan **mcurunatha@symcor.com**
   e. T.Thiruchselvam **t_thiruchelvam@hotmail.com**
   f. M.Thiyagendran **t.indran@gmail.com**
3. Page 3 Challenge Ahead
   For football Jersey, **$1000** was remitted. (This was personally done by N.Sivapalan.)

## Reflection from members

- "எப்ப ஹாட்லி பிக்னிக் எண்டு பார்க்க எங்கடை web site க்குப் போனன்; இரண்டு படம் ஓடுதெண்டதைப் பாத்து விறைச்சுப் போனன். அதுக்குத்தான் சொல்றது, We need **change."** -தென்புலோலியூர் கிருஷ்ணலிங்கம்

- எங்கடை ஹாட்லிக் கல்லூரியை ஆசியாவிலேயே மிகவும் தரம் மிக்க கல்லூரியாக வரத் தக்கதாகக் கட்டி யெழுப்ப வேணும். வெளி நாட்டிலை வசிக்கிற நாங்கள் எல்லாரும் நினைச்சால் அது நடக்கும். -சீ. சிவபாலரத்தினம்-

- Fellowship here is necessary, I agree, but funds in good amount have to go to the school for recons-truction. That is the bottom line. -L. Easwaranathan

- நல்ல தரமான programs ஐ ஒழுங்குபடுத்தி, quality ஆக souvenir அடிச்சு கலை விழா நடத்த வேணும். அப்ப தான் சனம் வரும். -சிவா. சி. சிவசோதி

- We must reach the young and pass the torch; then only will this Association last. V.Jeyaraman

- The way to get things done is, not to mind who gets the credit for them. -P.B

அங்கத்தவர்களின் அபிப்பிராயங்களையும் ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் நாங்கள் மிகவும் வரவேற்கிறோம். அவற்றைத் தமிழிலோ ஆங்கிலத்திலோ எழுதி எமது செயலாளரின் கவனத்துக்கு vij@rogers.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது 416-696-6894 என்ற fax எண்ணுக்கு அனுப்பி வையுங்கள்.

## ஆசிரியர் தலையங்கம்

"ஹாட்லி நின் மக்கள் நாம் .."

பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் மட்டுமின்றி, அறிவூட்டி ஆளாக்கிய நம் கல்வித்தாயாம் ஹாட்லிக் கல்லூரியும் என்றென்றும் நம் போற்றுதலுக்கு உரித்தானாதே. கடல் கடந்து வந்து கனடா வாசிகளாகி விட்ட நாம் எம் கல்லூரியின் பெயரால் இங்கே விழாக்கள் எடுப்பதும், நிதி சேகரித்து அனுப்புவதும் பெரிய விஷயங்கள். ஆனால் இன்றைய நிலையில் நாம் உடன் செய்ய வேண்டியது என்ன?

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் ஹாட்லிக்கல்லூயைச் சூழ்ந்து இராணுவக் காவலரண்கள்; அவற்றில் பீதியுடன் கடமையாற்றும் சிப்பாய்களின் கைகளிலுள்ள துப்பாக்கிகளிலிருந்து எந்த நேரமும் கைதவறி, குண்டுகள் சீறிப் பாயுமோ என்ற அச்சத்துடன் நடமாடும் மாணவர்களும் ஆசிரியர்களும், ஏதாவது திடீர் அசம்பாவிதம் ஏற்பட்டு விட்டால், தமது பிள்ளைகளை அழைத்துச் செல்வதற்காகப் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே தவமிருக்கும் பெற்றோர்கள்; இதன் விளைவுகள் எதிர் விளைவுகள் எப்படியிருக்கும்? வீதியில் பொலிஸ் காரரைத் துப்பாக்கியுடன் காணமுடியாத, ஆயுதப்படையினரை வீதியில் காணமுடியாத இந்த நாட்டில் இளைஞர்களின் 'துப்பாக்கி வன்முறை' (Gun violence) பற்றி நாமெல்லோரும் கவலைப் படுகிறோம். இந்தப் பின்னணியில் அங்கே எமது சிறார்களின் மன நிலையை யோசியுங்கள்.

ஹாட்லிக்கல்லூரியை யாரும் எப்போதும் ஒர் உயர் பாதுகாப்பு வலயத்தினுட் கொண்டு போய் அமைக்கவில்லை. 1838 இல் அமைக்கப்பட்டது எங்கள் கல்லூரி. 157 வருடங்களுக்குப் பின்பு, 1995 இல் வந்தது இந்த உயர் பாதுகாப்பு வலயம். யாருடைய பாதுகாப்புக்காக இந்த வலயம்? ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமை சாசனத்திற் கையெழுத்திட்ட அரசுக்கு இது அப்பட்டமான சிறுவர் உரிமைகள் மீறல் என்பது புரியாதிருக்கலாம், எமது புத்திஜீவிகளுக்கும் புரியவில்லையா? 2002 பெப்ரவரி 22 இல் கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (Memorandum of Understanding) இப்படியான பாதுகாப்பு வலயங்கள் 160 நாட்களுக்குள் அகற்றப்படும் என்று ஒரு மூன்றாவது (ஐரோப்பிய) நாடு சாட்சியாகச் சொல்லப்பட்டதே.

இனியொரு விதி செய்வோம்

எமது ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் இராணுவ அச்சுறுத்தல்களும் வீதித்தடைகளும் இல்லாத சுதந்திரமான சூழலிற் கற்கின்ற நிலை விரைவில் ஏற்படவேண்டும். இதற்காக நாம் அனைவரும் எம்மால் இயன்ற அனைத்து வழிகளிலும் பாடுபடவேண்டும். இங்குள்ள தலைவர்களுக்கும் பொது அமைப்புகளுக்கும் ஊடகங்களுக்கும் எமது நிலையைத் தெளிவுபடுத்தி ஆதரவு பெறவேண்டும்.

"சொந்தச் சகோதரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்
சிந்தை கலங்காரடி-கிளியே
செய்வதறியாரடி"

என்று பாரதி சொன்னது போன்ற பழிச்சொல்லுக்கு நாம் ஆளாவதா? சிந்தியுங்கள், செயற்படுங்கள். வெற்றி நிச்சயம்.

ஆசிரியர்: ச. சத்தியசீலன்

# Email campaign

An appeal to …

I write to appeal to you to use your good office, influence and all other means to urge the Sri Lankan government to withdraw its security forces from and around the premises of Hartley College in Point Pedro at Northern province to enable the students to continue their education in a peaceful and safe environment.

Hartley College, which was founded by Rev. Peter Percival in 1838, is one of the prestigious schools in Sri Lanka that has produced brilliant pupils who have adorned high institutions like UNO, WHO and WB. It is situated in the coastal town of Point Pedro in the Northern Province. The number of students attending this school is 1200 but the army camp that encircles Hartley shelters double that number of army personnel.

Education is an undeniable right of every child. This right is guaranteed by the Child Rights Charter (CRC) of the United Nations. Many countries, including Sri Lanka, have signed and accepted CRC. Every child should have access to education in a comfortable, friendly, safe, and secure situation. But the students of Hartley College are being forced to get their education in a completely negative situation.

During the civil war in mid eighties, our school was almost destroyed and in 1985, had to shift to Puttalai, a place 3 km away. For the next five years, students of Hartley College had to study in makeshift huts and under the trees. There was no electricity, no telephone, and no facilities. They were almost cut off from the rest of the world, but they still excelled both in academic and sports activities. 1990 the school shifted back to the original premises.

Then, late 1995, the Sri Lankan security forces reoccupied this area and since 1995, the students and staff of this well-known school are treated like hostages, for the sake of safety of the security forces. Around Hartley College, there are sentry points manned by soldiers carrying lethal weapons. The students and staff are subject to humiliating body- searches and have to surrender their identity cards when entering the school. The soldiers have encroached on part of the school premises and even the school playground. Parents and past pupils are not allowed to visit the school.

On December 5, 2005, students who held a peaceful protest to regain their rights were manhandled and attacked with tear gas and rubber bullets. Appeals from students, staff and parents to the government of Sri Lanka and human rights groups brought no results. Now, with the change in government, the situation has worsened. The security forces are tightening their grip around Hartley College and the students and staff are in a very dangerous situation. Recently, there was yet another cruel attack on the students which we fear that the media failed to highlight. Every parent is concerned and worried about the safety of their children. But parents who have their children at Hartley College have to undergo mental trauma every day till their children return home.

Your help is urgently needed to perform the necessary actions to help these students. The students, staff, parents and past pupils would be very grateful to you for your kind and worthy intervention in their hour of need.

Sincerely,

Hartley College Past Pupils' Association Canada USA Members - Executive Committee 2006




Seated: V. Jeyaraman (Auditor), V. Vijenthira (Secretary), C. Manoharan (Treasurer), K. Rajaratnam (President), K.Karunanidy (deceased) (Member), T.Thiruchelvam (Auditor), S. Sivarajah (Vice President)

Standing: N. Sivapalan (Member), G. Maheswaran (Member), S. Sathiyaseelan (Editor), S. Rudran (Asst. Treasurer), M. Thiyagendran (Member), K. Anandakrishnan (Member), M. Wijendra (Asst. Secretary), S. Sivapalaratnam (Member), V. Mohan (Member) V. Manoharan (Vice President) P. Rameswaran (Member)

Not in the picture: M. Thayaparan (Member) Raje Thanaraj (Member)

# HARTLEY COLLEGE

Past Pupils Association – Canada/USA

(Ontario Corporation Number 906192)

Established 1989

## LIFE MEMBERSHIP APPLICATION FORM

Membership No. ☐

Please check one ☐ Mr. ☐ Mrs. ☐ Ms. ☐ Miss.

Member name: ________________________________________

Other names: ________________________________________

Address: ________________________________________

________________________________________

Phone No.: Home: ____________________ Work:__________________

Email: Main: _______________________ Alt.: ________________

Years in Hartley College: ___________________________________

Grades in Hartley College: __________________________________

House: ______________________________

Enrolled by: ______________________________

As a past pupil/teacher of Hartley College, Point Pedro, I hereby apply for admission as a life member of Hartley College Past Pupils Association, Canada & USA, I am forwarding a check/cash for the life membership fee of $100.

________________________ ____________________

Signature Date

Note:

Please draw the check in favor of Hartley College Past Pupil Association and mail application form with check to the Treasurer:

Mr. C. Manoharan 48 Bethany Leigh Drive, Scarborough, ON M1V 2N7


Buy Or Sell Properties Thru Me And You Will Have A Chance To Win One Of Many Prices
WIN
1st Prize
BRAND NEW TOYOTA COROLLA
2nd Prize
Plasma TV
For Detail Call Raj
3rd Prize
Laptop Computer
Raj A Rasaratnam (B.Com)
Sales Representative
416-726-8055
416-299-8570
7 Consolation Prizes
3 Digital Cameras
3 BBQ Machines
1 Bicycle
some condtion may apply........ this is not intended to solicit the properties currently listed for sale Vehicle may not be as illustrated
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife GTA
Realty Inc., Real Estate Broker
Bus: (416) 321-6969
வீடு, வியாபார நிலையங்கள்
வாங்க விற்க
Mortgage Arrangement, Tax and Financial Consultation will be provided